# பத்திரிகைச்செய்தி

## 29.12.2016 மற்றும் 30.12.2016 அன்று நடைபெறவுள்ள கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறியாடுகளுக்கான "இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம்"

மாண்புமிகு தமிழக முதலவர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில், தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிகளுக்கு 4 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வீதம், 31 மாவட்டங்களில், 7,00,000 பயனாளிகளுக்கு, 28,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகளும் தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில் 60,000 பயனாளிகளுக்கு 60,000 கறவைப் பசுக்களும் 2011-12 முதல் 2015-16 முடிய உள்ள ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மேற்படி திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட்ட விபரம் கீழ் வருமாறு:

| வ. எண் | ஆண்டு | திட்டத்தின் பெயர் | குறியீடு | | | | சாதனை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை | | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை | | பயனாளிகளின் எண்ணிக்கை | | வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை | |
| | | | கறவைப் பசுக்கள் | வெள்ளாடுகள் | கறவைப் பசுக்கள் | வெள்ளாடுகள் | கறவைப் பசுக்கள் | வெள்ளாடுகள் | கறவைப் பசுக்கள் | வெள்ளாடுகள் |
| 1. | 2011-12 | விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் | 800 | 3196 | 800 | 12784 | 800 | 3196 | 800 | 12784 |
| 2. | 2012-13 | | 900 | 5326 | 900 | 21304 | 900 | 5326 | 900 | 21304 |
| 3. | 2013-14 | | 800 | 5312 | 800 | 21248 | 800 | 5312 | 800 | 21248 |
| 4. | 2014-15 | | 800 | 4996 | 800 | 19984 | 800 | 4996 | 800 | 19984 |
| 5. | 2015-16 | | 800 | 5330 | 800 | 21320 | 800 | 5330 | 800 | 21320 |
| 6. | 2016-17 upto November | | 200 | 663 | 200 | 2652 | 200 | 663 | 200 | 2652 |

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளின் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெறவுள்ளது.

விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கால்நடைகளுக்கான முகாம் அந்தந்த கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர்/ நாடாளுமன்ற உறுப்பினர் / சட்டமன்ற உறுப்பினர்கள்/ மக்கள் பிரதிநிதி / மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் தொடங்கப்படும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**